# திருமூலர் உணர்த்தும் மெய்யுணர்தல் நெறி

**முனைவர் இரா. பிரியதர்ஷினி**
**உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்**
**ஜி.டி.என். கலைக்கல்லூரி (தன்னாட்சி)**
**திண்டுக்கல்.**

11

**ஆய்வுச்சுருக்கம்**

இறைவன் அளப்பதற்கு அரியன். புலன்களுக்கும் தத்துவங்களுக்கும் அப்பாற்பட்டவன். எங்கும் எதிலும் நீக்கமற இறைவன் நிறைந்திருப்பான் என்பது சான்றோர் கொள்கை. இறைவன் வேறெங்கும் இல்லை நம்முள்ளே இருக்கின்றான். நம்மை நாம் உணர்ந்தால் நாம் இறைவனை உணரலாம் என்பது திருமூலர் கொள்கையாகும். துறவு மேற்கொள்ளாமலே இல்லற வாழ்வின் வழி இன்பமாக வாழ்ந்து, பேரின்பநிலையாம் இறைவனை அடைந்து அனைவரும் பிறவா நிலையை அடைய முடியும். இறைவனை அடைவதற்கான நெறிகளை திருமூலர் திருமந்திரத்தில் உலகிற்கு எடுத்துரைக்கின்றார்.

**திறவுச்சொற்கள்:** திருமூலர், மெய்யுணர்தல், நால்வகை நெறிகள், அன்புநெறி, உடம்பைக்காத்தல், இறைவனை அடைவதற்குரிய வழிகள்

**முன்னுரை**

பண்டைய சான்றோர்கள் தாங்கள் வணங்கி வழிபட்டுவந்த முழுமுதற்பொருளை இறை அல்லது இறைவன், கடவுள், தெய்வம் என்று பல பெயர்களால் போற்றி வந்துள்ளனர். இறை அல்லது இறைவன் என்ற சொல் 'இறு' என்னும் பகுதியின் அடியாகப் பிறந்த பெயர்ச்சொல்லாகும். இறு என்பது இறுத்தல் அல்லது தங்குதல் என்று பொருள்படும். 'இறை' என்ற சொல் ‘உள்ளும் புறமும் யாண்டும் நீக்கமற நிலை பெற்றிருப்பது' என்னும் பொருளை உணர்த்துவது ஆகும். அடியார்க்கு நல்லார் இறைவன் என்ற சொல்லிற்கு 'எப்பொருளிலும் தங்குகிறவன்' என்று பொருள் கூறுகின்றார். இறைவனை அடைவதே பிறவிப்பயனாகும். அதற்கு நாம் மெய்யுணர்வு பெற வேண்டும். அதாவது எது உண்மை என்பதை அறிந்து செயல்படும் திறன். அக்தகு மெய்யுணர்வை திருமூலர் காட்டும் நெறி வழி விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**மெய்யுணர்தல்**

‘மெய்’ என்ற சொல்லுக்கு உண்மை, உடம்பு, எழுத்து எனப் பல பொருள்கள் உண்டு. மெய்யுணர்தல் என்பது உண்மையை உணர்ந்து கொள்ளுதல் அல்லது உண்மைப் பொருளை உணர்ந்து கொள்ளுதல் என்ற பொருள்படும்.

'மெய்யுணர்தல்' குறித்து திருவள்ளுவர் தனி ஒரு அதிகாரம் வகுத்துக்கூறுகின்றார்.

மனச்சோர்வை உண்டாக்குகின்ற வாழ்வியலுக்கு அப்பால், உலகியல் சார்பில்லாத 'வீடு' அடைவதற்கான முயற்சியே மெய்யுணர்வு பெறுதல் என்று பல உரையாசிரியர்கள் மெய்யுணர்தலுக்கு விளக்கம் தந்துள்ளனர்.

இவ் அதிகாரம் பற்றி மணக்குடவர் உரைக்கும் பொழுது 'மெய்யுணர்தலென்பது எக்காலத்தினும் அழியாது எவ்விடத்தினும் நிற்கும் பொருள் இதுவென உணர்தல். இது பற்றறத் துறந்தாரது உள்ள நிகழ்ச்சியாதலான், துறவுடைமையின் பின் கூறப்பட்டது." என்று விளக்குகின்றார்.

**பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்**
**செம்பொருள் காண்ப தறிவ.** (திருக்குறள்,353)

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க பிறவித்துன்பத்திற்கு காரணமான அறியாமை நீங்குமாறு முக்தி எனும் சிறந்த நிலைக்குக் காரணமான செம்பொருளைக் காண்பதே மெய்யுணர்வு. இவ் உலகத்தில் உண்மை என்பது இறைவன், இறையன்பு, இறைவனின் திருவடி நிழலாகும். உலக உயிர்கள் அனைத்தும் இந்த மெய் உணர்வைப் பெற வேண்டும் என்பதையே பிறவிப்பயனாகக் கருதப்படுகின்றன. மெய்யுணர்வு பெறுவதற்குத் துணை நின்றவர்கள் சித்தர்கள். அவ் உணர்வை தாம் பெற்றதோடு நாமும் அதைப் பெற வழிநடத்துகின்றனர்.

‘சித்தி’ என்ற சொல் மெய்யறிதல், வெற்றி, காரியம் கைகூடல், மோட்சம் எனப் பலபொருள் தருவதாகத் தமிழ்ப் பேரகராதிக் குறிப்பிடுகின்றது. சித்தர்கள் என்போர் உண்மை நிலையை அறிந்தவர்கள் ஆவர். இறைவன் உண்மை வடிவினனாக இருக்கிறான் என்பதை உணர்ந்தவர்கள். மந்திரம், யோகம், சோதிடம், மருத்துவம், இரசவாதம் போன்ற அறிவியல்களைத் தந்தவர்கள்.தியானம்,யோகம் மூலம் தங்களுக்குள்ளே இறைவனைக் கண்டு வியந்தவர்கள். 'கடவுளைக் காண முயன்றவன் பக்தன். கண்டு தெளிந்தவன் சித்தன்' என்பர். யோகத்திலே வாழ்ந்தவர்கள். யோகத்தின் வழியாகத் தெய்வீக ஆற்றலைக் கண்டவர்கள்.

யோகச் சமாதி உகந்தவர் சித்தரே (திருமந்திரம்,1490:4)

சித்தர் சிவலோகம் இங்கே தரிசித்தோர்
சத்தமும் சத்த முடிவும் தம்முள் கொண்டோர் (திருமந்திரம்.பா.125:1-2)

என்று திருமூலரும்

ஆத்தாளைப் பூசித்தோன் அவனே சித்தன் (கருவூர்ச்சித்தர்,18:3)

என்று கருவூர்ச்சித்தரும் சித்தர்கள் பற்றி விளக்குகின்றனர். இறைவன் ஒருவனே. இறைவன் வேறெங்கும் இல்லை நமக்குள்ளே இருக்கின்றான். இறைவனும் தானும் என்ற இரண்டு நிலைகளில் அல்லாமல், இறைவனும் தானும் ஒன்றே என்ற என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தியவர்கள் சித்தர்கள். இச்சித்தர்களுள் முதன்மையானவராகக் கருதப்படுவர் திருமூலர் ஆவார்.

**திருமூலரும் திருமந்திரமும்**

இறைவனை முற்றிலும் உணர்ந்தவர். மிகச் சிறந்த யோகியாக, சித்தராக, ஞானியாகத் திகழ்பவர். தனது அட்டமாசித்திகளின் மூலம் மூலன் உடம்பில் புகுந்ததால் 'திருமூலர்' என அழைக்கப்படுபவர். 'நந்தி திருவருள் பெற்றவர்', 'நான்மறை யோகிகளொருவர்', 'அணிமாதி சித்தி பெற்றுடையார்', 'தவமுனிவர்' எனச் சேக்கிழார் பெருமானால் புகழப்படுபவர்.

திருமந்திரம் என்ற அரிய நூலை உலகிற்குத் தந்தவர். இந்நூல் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது. ஆகமங்களின் சாரமாகத் திகழ்வது. ஒன்பது உட்பிரிவுகளைக் கொண்டது. உலக மக்களுக்கெல்லாம் அறத்தையும், ஆன்மிகத்தையும், மருத்துவத்தையும் அறிவியல் கருத்துக்களையும் எடுத்துரைப்பது. ‘திருமந்திர மாலை’, ‘தமிழ் மூவாயிரம்’ என்ற பெயரிலேயே அழைக்கப்படும் நூல். மெய்யியல் நூல் வகையைச் சேர்ந்தது.

**தேவர் குறளும் திருநான்மறை முடிவும்**
**மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை**
**திருவாசகமும் திருமூலர் சொல்லும்**
**ஒருவாசகம் என்று உணர்** (நல்வழி, 40)

என்ற ஔவையார் வாக்கு இதனை விளக்கும். திருமூலரின் திருமந்திரத்தின்வழி உள்ள யோகம், தன்னைத் தானறிந்து, எது நினைக்கின்றோமோ அதுவாகவே ஆகி, தன்னை, உலகை, இறையை ஐக்கியமாக்கும் உள்வலிமைக்கான பயிற்சியைத் தருகிறது.

மனிதன் மன மகிழ்வுடன் வாழ வேண்டுமெனில் இறைவனை வழிபட வேண்டும். நாம் வழிபடுகின்ற தெய்வம் தான் நம்மைக் காக்கும். குற்றமற்ற செல்வத்தோடு நம் குடிகளை வாழ்விக்கும் என்பதை தொல்காப்பியர்,

**வழிபடு தெய்வம் நிற்புறங்காப்ப**
**பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து**
**பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே** (தொல்.பொருள். செய்யுளியல்109)

என்னும் நூற்பாவில் விளக்குகின்றார். இறைவனை வழிபடுவதற்கான நெறிகளைச் சான்றோர் பகுத்துள்ளனர்.

**நால்வகை நெறி**

இறையருளைப் பெற்று உயிர்கள் இன்புறச் சைவ மரபில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை நெறிகள் போற்றப்படுகின்றன.

- சரியை - தாசமார்க்கம் - சாலோகம்
- கிரியை – சத்புத்திர மார்க்கம் - சாமீபம்
- யோகம் – சகமார்க்கம் - சாரூபம்
- ஞானம் – சன்மார்க்கம் - சாயுச்சியம்

சைவநெறி நான்கினையும் தாயுமானவர் சரியையை 'அரும்பு' போன்றது என்றும், கிரியை 'மலர்' போன்றது என்றும், யோகம் 'காய்' போன்றது என்றும், ஞானம் 'கனி' போன்றது என்றும் உவமை கூறுகின்றார். இதனை,

**விரும்புஞ் சரியைமுதன் மெய்ஞ்ஞானம் நான்கும்**
**அரும்புமலர் காய்கனி போலன்றோ பராபரமே**

(தாயுமானவர்,பராபரக்கண்ணி,157)

என்று குறிப்பிட்டுள்ளார்.

- சரியை : இறைவனின் திருவுருவம் நோக்கிச் செய்யப்படும் வழிபாட்டு முறையாகும்.
- கிரியை : புறத்தொழில், தொழிலின் மாத்திரையாலே முதல்வனது அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யப்படும் வழிபாட்டு முறையாகும்.
- யோகம் : கரணங்களைச் இறைவனுக்காக அர்ப்பணம் செய்து அகத்தொழிலால் தியானம் செய்தல்.
- ஞானம் : இறைவனது புகழைக் கேட்டலும் அதனையே சிந்தித்திருத்தலும் ஞானம் ஆகும்.

சமயநெறி நின்ற சான்றோர் இந்நெறிகளைப் பின்பற்றுவோர்க்குக் கிடைக்கும் பலன்களை,

1. சாலோகம் : ஒரே உலகம் அதாவது இறைவனின் உலகத்தை அல்லது அவர் இருக்கும் இடத்தை அடைதலாகும்.
2. சாமீபம் : இறைவனுக்கு அண்மையை அடைதல்.
3. சாரூபம் : ஒரே ரூபம் அதாவது இறைவனின் ரூபத்தைப் பெறுதல்
4. சாயுச்சியம் : இறைவனோடு இரண்டறக் கலக்கும் நிலை என்று விளக்கம் தருகின்றனர்.

**ஞான நெறி**

உலகில் பிறந்த ஒவ்வொரு உயிரும் வினைப் பயன்களிலிருந்து விடுபட்டு முக்திநெறி அடைய வேண்டும் என்பதே உயிர்களின் விருப்பமாகும். வினைப் பயன்களால் உயிரின் உண்மை இயல்புகள் மறைக்கப்படுகின்றன. இதிலிருந்து விடுபட்டு உயிர்கள் தம் உண்மை நிலையையடைவதே 'முக்தி' நிலையாகும்.

"பாசத்தை அறுத்து சிவபதத்தை அடைய வேண்டுமென்பது' சித்தாந்தம் தரும் விளக்கமாகும். இதனையே வீட்டின்பம், வீடுபேறு, மோட்சம் என்று கூறுவர். இறைவனின் திருவடிப் பேறாகிய முக்திநிலை கை கூடுதற்கு சைவசமயம் வழி வகுத்துள்ளது. "முக்தி என்பது

துன்பமில்லாத எதிர்மறை நிலை மட்டுமின்றி, பேரின்பமயமான உடன்பாட்டு நிலையுமாகும். ஆன்மா இறைவனோடு 'இரண்டறக் கலத்தல்' இறைவனோடு ஆன்மா ஐக்கியப்படுதல்' என்பது சித்தாந்தக் கொள்கை முடிபு" என்று கி. இலட்சுமணன் கூறுகின்றார். (கி.இட்சுமணன், இந்தியத் தத்துவ ஞானம்,ப.401) சிவபெருமானின் திருவடி இன்பமே சித்தாந்தம் கூறும் முக்தி நிலை இன்பமாகும். இம் முக்தி நிலைக்கு நம்மை இட்டுச்செல்வது முன்னோர் கூறிய ஞானநெறி சிறந்த வழியாகும்.

முக்தி நிலையில் ஆன்மா எல்லையற்ற இன்பத்தை அனுபவிக்கும். இத்தகைய வீடுபேற்றிற்குச் சாதனமாக விளங்குவது ஞானநெறியாகும்.

**ஞானத்தால் வீடென்ற நான்மறைகள்**

**புராணம் நல்ல ஆகமஞ் சொல்ல...** (சிவஞானசித்தியார், சுபக்கம்,274)

என்று சிவஞானசித்தியார் வலியுறுத்துகின்றார்.

'ஞானம் என்பது ஈசன்பால் கொண்ட அன்பே' என்பர் சான்றோர். ஞானம் என்பது அன்பு என்று கருதப்படுகிறது. இந்நெறி இறைவனடியில் கலக்கும் சாயுச்சியப் பேற்றைத் தரவல்லது.. இந்நெறியில் நிற்பவர்கள் தொடக்கத்தில் செய்யும் ஞானபூசையானது ஞானநூல்களை ஓதுதல், ஓதுவித்தல், கேட்டல், கேட்பித்தல், சிந்தித்தல் என்று ஐந்து வகைப்படும் என மெய்கண்ட சாத்திரம் விளக்கம் அளிக்கின்றது.

இறைவனை மெய்ப்பொருளாக உணர்வதே ஆன்மாவின் வேட்கை. இத்தகைய ஞானத்தால் அடையும் மெய்யுணர்வே மிகச் சிறந்தது. இறைவனை அடைய ஞானமே சிறந்த சாதனம். இந்த ஞானம் மூன்று வகைப்படும். அவை,

1. பாசஞானம் 2. பசுஞானம் 3. பதிஞானம் எனப்படும்.

ஞானம் என்பது தெளிந்த அறிவு. ஐம்பொறி உணர்வாலும் அந்தகரணம், மனம் போன்றவற்றாலும் பெறப்படுவது பாசஞானம். பசுஞானம் என்பது மாயையின் பொருள்களிலிருந்து விடுபட்டு அறிவது. பசுஞானத்தால் ஆன்மா இறைவன் அறிவிக்க அறிகிறது. இங்கு இறைஞானம் தான் ஆன்மாவிற்கு ஞானத்தை வழங்குகிறது. இறைவனை வணங்க மனம் பண்படுவதே பதிஞானம் என்பர். பதிஞானம் தான் மிக உயர்ந்த ஞானம். இதனை உயர்ஞானம் என்று ஞானசம்பந்தர் கூறியுள்ளார்.

ஞானத்தின் படிநிலைகளாகக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகைகூடல் என நான்கினைக் கூறுவதுண்டு. இக்கருத்தினை,

**கேட்டலுடன் சிந்தித்தல், தெளிதல் நிட்டைகிளத்தலென**

**ஈரிரண்டாம் கிளக்கில் ஞானம்** (சிவஞானசித்தியார், சுபக்கம்,276)

எனச் சிவஞானசித்தியார் கூறுகின்றார். இவைகளைப் பின்பற்றி மெய்ஞானம் பெற வேண்டுமானால் மெய்ஞானத்தை உடைய இறைவனை அடைய வேண்டும். ஞானத்தைப்

பெற்றால் உலக வாழ்க்கை நிகழ்ச்சிகள் துன்பமாய்த் தோன்றும், பற்றுக்கள் நீங்கும், பிறவிக்கடல் நீந்தலாம். இதனையே வள்ளுவரும்,

**பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்**

**இறைவன்அடி சேரா தார்** (திருக்குறள்,10)

என்கிறார். மாணிக்கவாசகரும் ஞானநெறி கொண்டு திருப்பெருந்துறையில் சிவபோதம் உற்றார். இவ்வனுபவத்தை,

**திருவார் பெருந்துறைச் செல்வன் ஆகிக்**

**கருவார் சோதியிற் கரந்த கள்ளமும்** (திருவாசகம், கீர்த்தித்திருஅகவல்,54-55)

என்று கீர்த்தித் திருவகவலிலும்,

**உருகு தலைச்சென்ற வுள்ளத்தும் அம்பலத் தும்மொளியே**

**பெருகு தலைச்சென்று நின்றோன் பெருந்துறை..** (திருக்கோவையார்,104:1-2)

என்று திருக்கோவையாரிலும் அருளிச் செய்துள்ளார்.

**ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை**

**ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று**
**ஞானத்தின் மிக்கவை நன்முக்தி நல்காவாம்**

**ஞானந்தின் மிக்கார் நரரின்மிக் காரே** (திருமந்திரம்,1467)

என்று திருமூலரும் ஞானத்தாலேயே வீடுபேறு உண்டாகும் என்பதனை வலியுறுத்துகின்றார்

இதனை அப்பர் பெருமான்,

**ஞானத் தார்தொழு வார்சில ஞானிகள்**

**ஞானத் தால்தொழு வேன்உனை நானலேன்**
**ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு**

**ஞானத் தாய்உனை நானும் தொழுவனே** (திருநாவுக்கரசர் தேவாரம், 5:91:3)

என ஞானத்தை அன்பு என்ற பொருளிலே பாடியுள்ளார். மாணிக்கவாசகர்,

**நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்**
**சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வன்னம்**
**குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தைஎனக்கு**
**அறியும் வன்னம் அருளியவாறு ஆர்பெறுவர் அச்சோவே**

(திருவாசகம், அச்சோப்பதிகம்,2)

என்று நன்னெறிக்கண் வழிகாட்டி அருள் செய்த இறையருள் ஒன்றினையே தம் உள்ளக் கிடக்கையாகத் திருவாசகத்தில் கூறுகின்றார்.

**அன்புநெறி**

உலகில் அறிவுகளுக்கெல்லாம் எல்லையாக விளங்கும் இறைவனை எவ்வாறு மனம், மொழி, மெய்களால் ஆராய்ந்து தெளிகின்றோமோ அவ்வாறே இறைவனின் அருளைப் பெற முடியும். இறைவனை அடைய ஒவ்வொருவரும் தங்களுக்கு ஏற்ற வழியைக் கண்டுபிடிக்க, கடைப்பிடிக்க வேண்டும். இதனை,

**எவ்வாறு காண்பான் அறிவுதனக்கு எல்லை**
**அவ்வாறு அருள்செய்வான் ஆதி அரன்தானும்** (திருமந்திரம், 130:1-2)

எனக் கூறுகின்றார்.

**எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு.** (திருக்குறள்,355)

எந்தப் பொருளானாலும் அது எப்படிக் காட்சி தந்தாலும் அப்பொருளின் வெளித்தோற்றத்தைக் காணாமல், உள்ளடக்கமாகிய உண்மைப் பொருளைக் காண்பதே மெய்யுணர்தல் என்ற வள்ளுவர் கூற்றிற்கு ஏற்ப இறைவனை அடையவதற்கு அன்புநெறியே சிறந்த நெறி என்று திருமூலர் உணர்த்துகின்றார்

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்தி ருப்பாரே** (திருமந்திரம், 270)

அறிவில்லாதவர்கள் தாம் அன்பையும் இறைவனையும் வேறுவேறாகக் கருதுவர். மெய்யுணர்வு பெற்றவர்கள் அன்பு இருக்கும் இடத்தில் தான் இறைவன் இருப்பான் என்றுரைக்கின்றார். அன்பு என்பது மனமகிழ்ச்சி மட்டுமில்லை. இறைவனை நினைந்து உள்ளமானது நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகிக் கண்ணீர் மல்கக் கிடப்பதாகும். இதனை,

**அன்போடு உருகி அகம்குழை வார்க்கன்றி**
**என்போல் மணியினை எய்த ஒண்ணாதே** (திருமந்திரம், 272:3-4)

என்றும்

**என்அன்பு உருக்கி இறைவனை ஏத்துமின்**
**முன்அன்பு உருக்கி முதல்வனை நாடுமின்** (திருமந்திரம், 274:1-2)

என்றும் அறிவுறுத்துகின்றார். இதையே 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி என்று திருஞானசம்பந்தரும்

**நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து**
**நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே**
**நிறைந்து நிறைந்து ஊற்றெழும்**
**கண்ணிரதனால் உடம்பு**
**நனைந்து நனைந்து ..................** (திருவருட்பா, 5576)

என்று இராமலிங்க அடிகளும் உரைக்கின்றனர். இறைவனைக் காண வேண்டும் என்கிற தீராத

அன்பு கொண்டவர்கள் இறைவனைக் காண்பர். உலகப் பொருள்களின் மீது பற்றுகொண்டு, அன்பில்லாதவர்கள் கொடிய துன்பத்தைச் சுமந்தவராய் மீண்டும் மீண்டும் பிறவியெடுப்பர்.

**ஈரம் உடையவர் காண்பார் இணையடி**

**பாரம் உடையவர் காண்பார் பவம்தன்னை** (திருமந்திரம், 273:2-3)

என அன்பற்றவர்களின் நிலையைக் கூறுகின்றார்.

**அன்பினுள் ளான்புறத் தானுட லாயுளான்**

**முன்பினுள் ளான்முனி வர்க்கும் பிரானவன்**

**அன்பினுள் ளாகி அமரும் அரும்பொருள்**

**அன்பினுள் ளாருக்கே அணைதுணை யாமே.** (திருமந்திரம், 279)

உயிர்களின் உள்ளத்தில் தூய்மையான அன்பாக இருக்கும் இறைவனே வெளியே உடலாகவும் இருக்கின்றான். அவன் உலகத்தோற்றத்திற்கு முன்பே இருப்பவன் உலக அழிவிற்கு பின்னும் அழியாமல் இருப்பவன். இறைவனை அடைய அனைத்து வித பற்றுக்களையும் விட்ட முனிவர்களுக்கு தலைவன் அவன். தூய்மையான அன்பினுள் வந்து அமரும் அரிய பொருளான இறைவன் அன்பினை உள்ளத்தில் வைத்திருக்கும் உயிர்களுக்கு காக்கும் துணையாக எப்போதும் இருப்பான் என்று உரைக்கின்றனர்.

வண்ணம் வாழலாம், நாள்தோறும் இறைவனை எண்ணினால் நற்கதி உண்டாகும் என்று கூறுகின்றார். மக்கட்பிறவியானது நாம் செய்யும் நல்வினை, தீவினைகளைப் பொறுத்தே அமையும் என்ற கருத்தினை,

**அரிசுற் றவினை யால்அடர்ப் புண்டுநீர்**
**எரிச்சுற் றக்கிடந் தார்என்று அயலவர்**
**சிரிச்சுற் றுப்பல பேசப்ப டாமுனம்**

**திருச்சிற் றம்பலம் சென்றடைந்து உய்ம்மினே** (திருநாவுக்கரசர் தேவாரம், 4:92)

என்று திருநாவுக்கரசரும் சுட்டிக் காட்டியுள்ளார். இவ்விரு வினைகளும் நீங்கி இறையருள் பெறவேண்டுமெனின் இறைவனை நாட வேண்டும். உண்மையான அன்பு கொண்டவர்களுக்கு இறைவன் தானே வந்து அருள் வழங்குவான். இக்கருத்தை மணிமேகலையும்,

**பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்**
**பிறவார் உறுவது பெரும் பேரின்பம்**
**பற்றின் வருவது முன்னது பின்னது**

**அற்றோர் உறுவது அறிகென்று அருளி**
**ஐவகைச் சீலத் தமைதியும் காட்டி**

**உய்வகை இவைகொள் என்றுஉரவோன் அருளினன்**

(மணிமேகலை, ஊரலருரைத்தக் காதை, 64-69)

என்று இறைவன் அருள் வழங்கும் திறத்தை உரைக்கின்றது. மேலும் அன்பினால் விளையும் நன்மைகளை,

**அன்புறு சிந்தையின் மேலெழும் அவ்வொளி**
**இன்புறு கண்ணியொ டேற்க இசைந்தன**
**துன்புறு கண்ணியைந் தொடும் துடக்கற்று**
**நண்புறு சிந்தையொடு நாடுமின் நீரே.** (திருமந்திரம், 282)

அனைத்து உயிர்களிடமும் தூய்மையான அன்புடன் இருப்பவர்களின் எண்ணத்தில் பேரொளியாக எழும் இறைவன் உயிர்களின் பிறவியை அறுத்து பேரின்பத்தைக் கொடுக்கும் அமிர்தமாக இரண்டு கண்களுக்கு நடுவே இருக்கும் ஆக்ஞா சக்கரத்தில் இணைந்து எழுகின்றான். உயிர்களின் உள்ளத்தில் பேரொளியாக இறைவன் எழுந்தபின் ஆன்மாக்களுக்கு துன்பத்தை தரும் ஐம்புலன்களின் தொடர்பு அறுபட்டு நீங்கும். எனவே அனைத்து உயிர்களிடமும் அன்பையே சிந்தனை செய்தால் இறைவனை அடையாலம் என்பதன் மூலம் அன்புநெறியினால் இறைவனை அடையலாம் என நமக்குத் திருமூலர் வழிகாட்டுகின்றார்.

**உடம்பைக்காத்தல்**

இறைவனை அறிவதற்கும் அடைவதற்கும் இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று அக வழிபாடு. மற்றொன்று புற வழிபாடு. இதில் அக வழிபாடு என்பது அகத்தால், உள்ளத்தால் வழிபடுவது. இதையே அன்புநெறி என்கிறார் திருமூலர். புற வழிபாடு என்பது இறைவன் வீற்றிருக்கும் இடங்களுக்குச் சென்று பூசை செய்து வழிபடுவதாகும். கடவுள் வெளியே இல்லை நம்முள்ளே இருக்கிறார் நம் உடம்பே அவர் வீற்றிருக்கும் ஆலயம் என்பது திருமூலரின் கொள்கை. அதனால் தான்,

**உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்**
**உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்று**
**உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே.** (திருமந்திரம், 725)

உடம்பை முன்பு குறையுடையது என்று எண்ணியிருந்தேன். உடம்புக்குள்ளே பரம்பொருளாகிய இறைவன் தானே வந்தடையும் என்பதையும் அவன் இந்த உடம்புக்குள்ளே கோவில் கொண்டுள்ளான் என்பதையும் தெரிந்து கொண்டேன். இந்த உடம்பைப்பேணி பாதுகாக்கின்றேன் என்றும்,

**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்**
**உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.** (திருமந்திரம், 724:3-4)

என்ற அடிகளில் உடம்பைப் பேணி காத்தால் தான் அதனுள் இருக்கும் இறைவனை நம்முள்ளே வைத்துக் கொள்ள முடியும் என்றும் கூறுகின்றார். கோவில்கள் மனிதர்களின் வடிவமைப்பைக் கொண்டிருக்கின்றன. மனிதமும் இறைமையும் வேறு வேறல்ல என மனிதர்களைக் கோவிலோடு

ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

**உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**

**வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்** (திருமந்திரம், 1823:2-3)

நமது உள்ளம் இறைவன் வீற்றிருக்கும் கருவறை. நம் உடம்பே ஆலயமhகும். அதாவது நம் உடம்பாகிய கோயிலில் ஜீவனாகிய உயிரே கடவுளாக இருக்கின்றார். உலக உயிர்களுக்கு அருளை வழங்கும் வள்ளலாகிய பரம்பொருளை சென்று வழிபடும் வெளி வாசலான கோபுர வாசலாக விளங்குவது நம் வாய் என்று திருமூலர் குறிப்பிடுகிறார். இதைத் தான் அகம்பிரம்மா என்று வேதம் கூறுகிறது. உள்ளன்போடு உயிர்களை நேசிப்பது சிறந்ததாகும் என்பதே திருமந்திரம் உணர்த்தும் கருத்தாகும். இதனால் உடம்பைக்காப்பதன் அவசியத்தை உணர்த்துகின்றார்.

**உடம்பைக்காக்கும் முறை**

கழுத்தையும் இடுப்பையும் வளைக்காமல் நேராக வைத்துக் கொண்டு அமர்ந்திருந்து மூச்சுக்காற்றை சுழுமுனை நாடி வழியே மேலேற்றி சகஸ்ரதளத்தோடு (சகஸ்ரதளம் என்பது உச்சந்தலையில் இருப்பதாகும்) கலந்து மறுபடியும் உடல் முழுவதும் பரவும் சுழற்சியை செய்து கொண்டிருந்தால் உடல் எவ்வளவு காலம் ஆனாலும் அழியாமல் இருக்கும் என்பதனை,

**மூன்று மடக்குடைப் பாம்புஇரண்டு எட்டுள**

**ஏன்ற இயந்திரம் பன்னிரண்டு அங்குலம்**

**நான்றவிம் முட்டை இரண்டையும் கட்டியிட்டு**

**ஊன்றி யிருக்க உடம்புஅழி யாதே** (திருமந்திரம், 728)

எனவரும் அடிகளில் எடுத்துக்கூறுகின்றார். இறைவனோடு இரண்டற கலக்க, மூச்சுக்காற்றையும் மூலாக்கினியையும் சரியாகச் செலுத்தும் அகயோகத் திறன் பெற்றிருக்க வேண்டும் என்கிறார் திருமூலர்.இதனை,

**உந்திச் சுழியி னுடனேர் பிராணனைச்**

**சிந்தித் தெழுப்பிச் சிவமந் திரத்தினால்**

**முந்தி முகட்டின் நிறுத்திய பானனைச்**

**சிந்தித் தெழுப்பவே சிவனவ னாமே** (திருமந்திரம், 732)

நாசியின் மூலம் தொப்புள் இருக்கும் வயிறு வரை உள்ளிழுத்த மூச்சுக்காற்றை இறைவனை நினைத்து தியானித்துக் கொண்டே மேலே எடுத்துச் சென்று இரண்டு புருவங்களுக்கு மத்தியில் நிறுத்தி வைத்துவிட்டு மூலாதாரத்திலுள்ள மூலாக்கினியை இறைவனை சிந்தித்துக் கொண்டே சுழுமுனை நாடியின் வழியாக மேலே எடுத்துச் சென்று இரண்டு புருவங்களுக்கு மத்தியில் நிறுத்தி வைத்த காற்றோடு சேர்த்து வைக்க வேண்டும். அவ்வாறு செலுத்தும் ஆற்றல்பெற்றவன் சிவமாம் தன்மையை அடைவர்.

**பிண்டம் சுருங்கின் பிராணன் நிலைபெறும்**

**உண்டி சுருங்கில் உபாயம் பலவுள** (திருமந்திரம்,735:2-3)

உடம்பானது பருக்காமல் மெலிந்து உறுதியோடு திகழ வேண்டும். உணவானது உண்ணும் அளவும் சுவையும் குறையும் போது,

**ஞாலம் அறிய நரைதிரை மாறிடும்**

**பாலனும் ஆவர் . . . . . . . . . . . . .** (திருமந்திரம்,734:3-4)

என உடலுக்குப் பலவகையாக நன்மைகள் கிடைக்கும்.

இதனால் உடம்பை மூச்சுப்பயிற்சி, தியானம், உணவுக்கட்டுப்பாடு போன்ற முறைகளைப் பின்பற்றி பாதுகாக்கலாம் என திருமூலர் நம்மை நெறிப்படுத்துகின்றார்.

**தொகுப்புரை**

இறைவனின் அன்பும் அருளும் கிடைக்கப்பெற்றால் உலக வாழ்க்கையிலிருந்து நீங்கி ஆன்மா முக்தி அடையமுடியும். அன்பையும் அருளையும் பெறுவதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான நெறிகளைக் கடைபிடிக்கின்றனர்.

பாதை எதுவாயினும் சேரும் இடம் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதற்கு ஏற்ப, இறைவனை அடைவதற்கான நெறிகள் பலவாயினும் இறுதியில் இறைவனையே அடைய வேண்டும்.

அத்தகு நெறிகளுள் உண்மையான நெறியைத் திருமூலர் நமக்கு உணர்த்துகின்றார். ‘தேடித் தேடொனாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன்’ (திருநாவுக்கரசர்,4:93) என்று திருநாவுக்கரசர் கூறுவதையே திருமூலரும் இறைவன் நம்முள்ளே இருக்கின்றார்.

இந்த உண்மையை நாம் அறிந்து கொண்டால் இறைவனை அடையலாம். அன்பும் இறைவனும் வேறில்லை. அன்பு இருக்கும் இடத்தில் இறைவன் இருப்பான். நம் உடம்பு இறைவன் இருக்கும் இடம். அதைப் பேணி பாதுகாத்தல் இறைவன் நம்முள்ளே குடிகொள்வான் என்று திருமூலர் இறைவனை அடைவதற்குரிய மெய்நெறிகளை எடுத்துரைக்கின்றார்.

**துணை நின்ற நூல்கள்**


1. கண்ணப்ப முதலியார் (உரை),(1979), தமிழ் மந்திரம் மூலமும் உரையும், வானதி பதிப்பகம், சென்னை.
2. சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் (உரை),(1982), சிவஞானசித்தியார், கழக வெளியீடு, சென்னை
3. தமிழ்ப்பிரியன்(உரை),(2016),சித்தர் பாடல்கள் மூலமும் உரையும்,கற்பகம் புத்தகாலயம்,சென்னை.
4. மணிவாசகன்(உரை),(2003),திருமந்திரம் மூலமும் எளிய உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.
5. வெள்ளைவாரணன்,க. (உரை),(2022), பன்னிரு திருமுறை வரலாறு, அமராவதி பதிப்பகம், சென்னை.